

# FRIDAY SERMON

**15 FEBRUARY 2019**

**(09 JAMADI'UL AAKHIR 1440 AH)**

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

## "THE YOUTH OF THE UMMAH IN PERIL"

## "மானிட சமுதாயத்தில் இளைஞர்கள் அபாயத்தில்!"

**PART – I**

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ீ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ீ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

மேற்கு இராஜியங்கள் மற்றும் அமெரிக்கமக்களின் தாக்கதால், நவீன நூற்றாண்டில் சுதந்திரமும் சட்டத்திற்கு மாறான செயல்பாடுகள் காரணமாக இளைஞர்கள் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர். இந்த நம்பிக்கையற்ற சமூகத்தின் தீய செயல்களை நாம் கண்டுகொளளாமலிருந்தால், சமுதாயத்தில் இளைஞர்கள் மிக அதிகம் தீங்குகளுக்கு ஆளாகிவிடுவார்கள். உலகமயமாதலின் விளைவாக மிக பெரிய பிரச்சினைகள் நிகழ்ந்துவிடும். அதன் தாக்கத்தால் சமுதாயத்தை சார்ந்த இளைஞர்களின் வாழ்க்கை முறைகள் மாற்றத்திற்கு உள்ளாகிவிடும். அவர்களின் பருமாற்ற முறைகளும் மாறிவிடும். இது மிக பெரிய ஒரு பிரச்சினையாக இருக்கின்றது.

## THE YOUTH'S MISSION / இளைஞர்களின் பணி

எதிர்காலத்தின் வாக்குறுதி என்பது இளைய தலைமுறையாகும். எல்லா நிலையிலும் அது உண்மையாகும் அதில் எந்த சந்தேகமும் இல்லை. சமூகத்திலானாலும், இராஜ்ஜியங்களிலானாலும், அமைப்புகளிலானாலும், மக்களிலானாலும், குடும்பத்திலானாலும் சரி எல்லா காரியங்களுக்கும் இன்று இளைஞர்களின் தேவை உண்டு. அவர்கள் வழியாக அது தொடர்ந்து வர வேண்டும். இஸ்லாமிய இளைஞர்களும் இவ்வாறே இருக்க வேண்டும். உலகின் எல்லா பகுதிகளிலும் சமுதாயத்தை முன்னடத்த வேண்டியது இந்த இளைஞர்கள்தான். இளைஞர்களுக்கு ஒரு முக்கியமான பணி உள்ளது. பெரியவர்களிடமிருந்து அதனை இளைஞர்கள் ஏற்றெடுக்க வேண்டும். இஸ்லாமின் உண்மையான போதனைகளை பரப்புவதைத் தொடர வேண்டும். குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு கல்விமையங்களை அமைக்க வேண்டும். எல்லாவற்றிர்க்கும் மேலாக பிற சமுதாயத்தை சார்ந்தவர்களை சகோரர்களை போன்று காண வேண்டும். தனது அண்டை வீட்டாரை மதித்து நடந்துக் கொள்வது இறை பக்தியின் அறிகுறி என்று குர்-ஆனிய வசனங்களிலிருந்தும் திருநபியின் போதனைகளிலிருந்தும் தெள்ளதெளிவாக காணலாம்.

இத்தகைய மரியாதைகள் மூலம் ஒவ்வொரு இளைஞர்களுக்கும் நாளைய உலகின் தூண்களாக மாற முடியும். சமுதாயத்திற்கு வலுவான அஸ்திவாரத்தை அமைக்க அவர்களுக்கு முடியும். அது வாயிலாக அமைதி, சாந்தி, பொறுமை மற்றும் இணக்கத்தினை கொண்ட ஒரு வாழ்கையினை அவர்களுக்கு அமைக்க முடியும். உலகமயமாக்கலின் எழுச்சியுடன், உலகின் அனைத்து பகுதிகளிலும் அதன் தாக்கம் ஏற்ப்பட்டு விட்டது. இளைஞர்கள் மிக கடினமான ஒரு காலகட்டம் வழியாக செல்கின்றனர்.

## "THE YOUTH'S EMBARRASSMENT"

## "இளைஞர்களின் பதற்றம்"

உண்மையில் சமுதாயத்தை சார்ந்த இளைஞர்கள் இந்த சூழ்நிலையில் பதற்றம் அடைந்தவாறு உள்ளனர். ஏனெனில் அவர்கள் இரண்டு அக்கினி (Fires)க்கு இடையே அகப்பட்டுவிட்ட நிலையில் உள்ளனர்.

1. இஸ்லாமின் தத்துவம் அதாவது ஹறாமும் (விலக்கப்பட்டது) ஹலாலும் (அனுமதிக்கப்பட்டது) வேறுபடுத்தப்பட்டிருக்கிறது.
2. இந்த அர்ப்பமான உலகில் அவநம்பிக்கையாளர்களுக்கு எல்லா காரியங்களிலும் எல்கையற்ற நிலையில் சுதந்திரம் உள்ளது.

இஸ்லாமிய இளைஞர்கள் பதற்றம் நிறைந்த ஒரு கட்டத்திலாகும். இது முற்றிலும் ஒரு உண்மையாகும். இந்த தருணத்தில் ஒரு கேள்வியினை நமக்கு எழுப்பலாம். இஸ்லாமிய இளைஞர்களின் இந்நிலைக்கு காரணம் என்ன? அதற்கு எளிதான ஒரு உதாரணத்தை பாருங்கள். வருடத்தின் முடிவில் பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் பல்வேறு விழாக்களை அமைத்து மகிழ்கின்றனர். அவ்விழாக்களில் பங்கேற்பதற்கு ஒவ்வொருவரும் வாய்ப்பினை தேடுகின்றனர். அனுமதிக்கப்பட்ட சமூக ஆசாரம் அவர்களை அவ்வாறு செய்ய கட்டாயப்படுத்துகிறது. சமுதாயத்தை சார்ந்த இளைஞர்கள், அவர்களுக்கு வலுவான ஈமான் இல்லாமல் இருந்தால், நண்பாகளின் தாக்கத்திற்குட்பட்டு சற்று

மது அருந்துவதற்கு கட்டாயமாகின்றனர். அதை தொடர்ந்து சிறுதாக நடனம் செய்வதற்கும் அவர்கள் ஆளாகின்றனர். அதில் பங்கேற்பதன் மூலம் சட்டத்திற்குமாறான காரியங்களில் பங்கேற்பதற்கான சூழ்நிலை அவர்களுக்கு உருவாகின்றது. வருத்தத்திற்குரிய மற்றொருகாரியம், அதாவது சமுதாயத்தைச் சார்ந்த இளைஞர்களின் நம்பிக்கை அபாயத்திலாகும். அவர்கள் சந்தித்துவரும் மன உளச்சல் இக்காரியத்திலாகும். ஒன்று அவர்கள் இஸ்லாமிய வழியினை பின்பற்ற வேண்டும். அல்லது அமுஸ்லீம்கள் அவர்களை அழைக்கும் பொழுது அந்த பொறியில் வீழ்ந்து ஹறாமான செயல்களில் அவர்கள் ஈடுபட்டுக் கொள்கின்றனர். விலக்குப்படடிருக்கும் காரியங்களின் மீதான சுவையினை அவர்கள் அறிந்துவிட்டால், பின்னர் அப் பொறியில் அவர்கள் வீழ்ந்து விட்டனர் எனலாம். பின்னர் அதிலிருந்தும் வெளியேற முடியாத நிலை வந்தடையும். அவ்வாறு அவர்கள் முஸ்லீம் நம்பிக்கையில் வெட்கப்படுகின்றனர். தொடர்ந்து அமுஸ்லீம்களைப் போல நடந்து கொள்ள ஆரம்பித்து விடுகின்றனர்.

**"DRUGS AND OTHER INTOXICANTS ARE KILLING OUR YOUTH"**

**"போதை மருந்துகள் நமது இளைஞர்களை கொலை செய்கிறது."**

நான் வெளிப்படையாக கூறுகிறேன். இங்கு மௌரீஷியஸில் அதாவது நமது இந்த சிறு தீவில் போதை மருந்து அதன் வழியிலுள்ள அனைத்தையும் அழித்து வருகிறது. எல்லா சமுதாயங்களிலுமுள்ள இளைஞர்கள் குறிப்பாக இஸ்லாமிய இளைஞர்கள் போதை மருந்துக்களுக்கு எதிரான விழிப்புணர்வை பெற்றிருக்கவேண்டும். போதைமருந்துகளும், மதுவும் சிகரெட்டும் பாக்கிய விளையாட்டுகளும் நமது இளைஞர்களை அழிப்பதை அனுமதிக்கக் கூடாது. நமது சமுதாயத்தை இது எவ்வாறு அழித்து வருகின்றது என்பதை நாம் பகுத்தறிய வேண்டும்.

அல்லாஹ் திருக் குர் - ஆனில் கூறுகின்றான்.

**"நம்பிக்கை கொண்டவாகளே! போதைப் பொருள்கள், சூதாட்டம், சிலை வழிபாடுகள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியன அருவருக்கத்தக்கதும்**

**ஷைத்தானின் செயலுமேயாகும். எனவே நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, அவற்றிலிருந்து முற்றிலும் விலகிக் கொள்ளுங்கள். போதைப் பொருள்கள் சூதாட்டம் ஆகியவற்றால் உங்களுக்கிடையே பகையையும், வெறுப்பையும் உருவாக்கி, அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்து தொழுகையிலிருந்தும் உங்களை தடுத்துவிடவே ஷைத்தான் விரும்புகின்றான். எனவே நீங்கள் இவற்றிலிருந்து தவிர்த்து கொள்ள மாட்டீர்களா? (5:91-92)**

இது இளைஞர்களைக் கொன்றுகுவிக்கும் ஒரு தீய கூட்டமாகும். சிறிய அளவிலான மது மற்று சிகரெட் ஆகியவையால் முதலில் அவர்கள் ஆரம்பிக்கின்றனர். மது அவர்களுக்கு போதையை வழங்குகிறது. பிரச்சனைகள் நிறைந்தவை என அவர்கள் எண்ணும் இவ்வுலகிலிருந்து வேறுபட்ட ஒரு நிலையினையும், ஒருதனிமையினையும் அது அவர்களுக்கு அளிக்கிறது. சிகரெட் அவர்களுக்கு சுதந்திரம் மற்றும் ஆண்மையின் உணர்வை வழங்குகிறது. துரதிர்ஷ்டவசமாக இத்தகைய போதைமருந்துகளுக்கும், சிகரெட்டிற்கும் அடிமையாகுவது இளைஞர்களும், பெரியவர்களும் மட்டுமல்ல மாணவிகள் மற்றும் பெண்கள் கூட இப்பொறியில் அகப்பட்டிருக்கின்றனர். ஆண்களுக்கு சமமானவர்கள் என இவர்களும் எண்ணுகின்றனர். ஆண்களைப்போல் நடந்துக்கொள்ள எந்த தயக்கமும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் பின்பற்றுவது முற்றிலும் அருவருப்பானவையாக இருந்தும், அதற்கு அவர்கள் எந்த சோம்பலும் காட்டுவதில்லை.

அவ்வாறு ஒரு சிகரெட் துண்டிலிருந்து ஒரு சிகரெட்டை சென்றடைகிறது. பின்னர் அது சிகரெட் பாக்கட்ற்றில் செல்கிது. பிறகு அது அதிகரித்து விடுகிறது. சிகரெட்டிலிருந்து அவர்களுக்கு போதுமான மகிழ்ச்சியினை பெற முடியாமல் வரும் பொழுது, இளைஞர்கள் மெதுவாக சுய விருப்பத்தினாலோ அல்லது நண்பர்களின் ஊக்குவித்தல் காரணமாகவோ மதுவின்பால் திரும்புகின்றனர். ஒரு சிறு டம்ளரிலிருந்து அவர்கள் புட்டியில் செல்கிறனர். முடிவில் அவர்கள் மதுவுக்கு அடிமைகளாக மாறிவிடுகின்றனர். இதே நிலைதான் போதை மருந்துகளின் காரியமும். முதலில் சிறு மகிழ்ச்சியினை பெற போதை பொருட்களை சுவைத்துப்பார்க்கின்றனர். பின்னர் மேல் கூறிய அந்த கூட்டத்தின்

பொறியில் இந்த இளைஞர் அகப்படுகின்றார். பின்னர் அவருக்கு போதை மருந்தின் சதியில் வீழாமல் வேறு எந்த வழியும் இல்லாமல் வருகிறது.

## "SYNTHETIC DRUGS"

### "செயற்கை வழியாக தயாரிக்கும் போதை மருந்துகள்"

சுய விருப்பத்துடனோ அல்லது விருப்பமில்லாமலோ போதை மருந்துவகைகளை பயன்படுத்துகின்ற இளைஞர்கள் அழிந்து வருகின்றனர். ஏனெனில் இது வழியாக அவர்கள் போதை மருந்துகள் அருந்தும் தீய பழக்கங்களளுக்கு அடிமைகளாகின்றனர். அது அவர்களை ஆபத்தான நிலையில் அழைத்து செல்கிறது. போதை மருந்தின் ஒரு சிறிய அளவு அதாவது கானாபீச (Cannahis), மறிஜுவான (mariyuana), காண்டிய(gandia) போன்றவையினை நாம் புசித்துக் கொண்டால், அது பின்னர் நம்மை பெரிய அளவில் அழைத்துச்செல்கிறது. இதனை வழக்கமாக்கியவர், மேலும் ஆற்றல் வாய்ந்த போதை மருந்துகளை பயன்படுத்தும் கட்டாய நிலைக்கு ஆளாகிவிடுகின்றார். அதாவது ஹீறோயின் (heroin) மட்டுமல்ல தற்போது செயற்கை வழியாக தயாரிக்கும் போதை மருந்துகளும் கிடைக்கிறது.

அரசாங்கம் மற்றும் அதன் அதிகாரிகளுக்கு நான் அவசரமாக ஒரு முறையீடு வழங்க விரும்புகிறேன். பள்ளிக்கூடங்களில் கல்விபுரியும் அநேக மாணவர்கள் செயற்க்கை வழியாக தயாரிக்கும் போதை மருந்துகள் மற்றும் போதை பொருட்களை பயன்படுத்தி வருகின்றனர். 12, 13 வயதான சிறுவர்களும் அதை போல எலிமென்றி பள்ளிகளில் கல்வியினை நிறைவு செய்து புதிதாக கல்லூரியில் செல்பவர்களும் போதை மருந்து மற்றும் போதை பொருட்களின் இரையாக மாறிவிட்டனர். கானாபீஸ் புகை பிடிப்பதற்கும் அவர்கள் ஆரம்பித்துள்ளனர். சமுதாயத்தை சார்ந்த இளைஞர்களும் இந்த போதை மருந்து சங்கங்களுடன் இணைந்திருக்கின்றனர். இப்பொழுது செயற்கை வழியாக உற்பத்தி செய்யும் போதை மருந்துவகைகள் எல்லாபகுதிகளிலும் அதாவது இந்த தீவின் முக்கிலும் மூலையிலும் கிடைக்கின்றது. அது நமது இளைஞர்களை முழுமையாக அழித்துவிடும் பயங்கரமான நஞ்சாகிறது.

நான் மேற்கொண்ட ஒரு ஆராய்வின்படி, செயற்க்கை வாயிலாக உற்பத்தி செய்யும் போதை மருந்துகள் ஹெறோயினைவிட அபாயமானது அதிகாரிகள் மேற்கொண்ட காரியங்கள் பாராட்டத்தக்கது. எல்லா வகையான போதை மருந்துகளை அவர்கள் பறிமுதல் செய்தனர். அவ்வேலையினை மிக சிறப்பான முறையில் அவர்கள் செய்தனர் என நான் எண்ணுகின்றேன். ஆனால் இவ்வேலைகளை மிக நன்றாக செய்தோம் என எண்ணி நாம் அமைதியாக இருக்கவேண்டிய நேரமல்ல. இக்காரியத்தில் நாம் தொடந்தும் கவனமாக இருக்க வேண்டும்.

நமது சமூகத்தில் போதை மருந்துகள் மிக ஆழமான தரத்தில் காயத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இளைஞர்களில் பெரிய காயத்தை அது ஏற்படுத்தியுள்ளது. இது அரசாங்கம் மிக கௌரவத்துடன் காண வேண்டும். இத்தகைய போதை மருந்து வகைகளை நமது அதிகாரிகள் பறிமுதல் செய்யாமல் இருந்திருந்தால் நமது இளைஞர்களுக்கு என்ன நிகழ்ந்திருக்கும்! 80 - ம் ஆண்டுகளில் பிரவுண் சுகர் (Browm Sugar) மிக பெரிய அழிவை ஏற்படுத்தியிருந்தது. அன்று ஒரு பாக்கட்டிற்கு 10 ரூபாய் மட்டும் தான் விலை ஆனால் இன்று ஒரு பாக்கட் 250 ரூபாயாகும் இப்போது, அன்று போதை மருந்திற்கு அடிமையான ஒரு நபருக்கு குறைந்தது தனது பயன்பாட்டிற்கு 1000 ரூபாய் தேவைப்படுகிறது. இதன் காரணமாக பயரங்கமான திருட்டு மற்றும் வழிப்பறி கொள்ளை போன்றவை நிகழ்கிறது. இதைக் குறித்த செய்திகளை ஒவ்வொரு வாரமும் காணலாம் மற்றும் பல குற்ற நிகழ்வுகளும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் மீது புகார்களும் ரஜிஸ்டர் செய்யபட்டு வருகிறது.

இன்று இத்தகைய குற்றங்கள் அதிகரித்து வருகிறது. கொலை, வழிப்பறிகொள்ளை மற்றும் பலதரப்பட்ட திருட்டு போன்றவை பெருகி வருகிறது. பயங்கரகமான இத்தகைய திருட்டுகளுக்கு இரை ஆகிய அநேக மக்கள் இன்று பயத்துடன் வாழுகின்றனர். மனைக்குள் கூட அவர்களுக்கு எந்த பாதுகாப்புமில்லை. எனது ஆராய்வின்படி செயற்கைவாயிலாக உற்பத்தி செய்த போதை பொருட்கள் 2013 முதல் சுற்றுவட்டார கடைகளிலும் கிடைக்கிறது. அந்த பொருட்கள் சீனாவிலிருந்து வருகிறது.

மௌரீஷியஸில் செயற்க்கை வாயிலாக தயாரிக்கும் கஞ்சாவை பயன்படுத்தி வருகின்றனர். எலிக்கு எதிராக பயன்படுத்தும் மருந்துகளை கூட செயற்க்கை வகையான போதை மருந்துகளில் சேர்க்கின்றனர். என மக்கள பேசிக் கொள்கின்றனர். நான் மேற்கொண்ட ஆராய்வின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட உலர்ந்த இலையினை, கரைக்கும் தன்மை பெற்ற ஒருவகையான நீருடன் சேர்க்கின்றனர். அதற்க்குள் எலி விஷத்தை சேர்த்தால் அது மிக வலுவான போதை மருந்தாக மாறிவிடுகிறது. மௌரீஷியஸில் இந்த போதைமருந்து உற்பத்தி செய்யும் தொழில் பாரம்பரியமாக நடைபெற்று வருகின்றது. உங்களுக்க கற்பனை செய்ய முடியும். ஒரு சிறிய பாக்கட் (Small Pouch) 100 ரூபாவுக்கு பெறலாம். விலை குறைவாக இருப்பதால் தங்களது பாக்கட் மணியிலிருந்தே இளைஞர்களுக்கு அதனை வாங்க முடியும். ஒவ்வொருவருடைய கைகளில் அத்தொகை இல்லாமல் இருந்தால் ஐந்து நண்பர்கள் சேர்ந்து ஒவ்வொருவரும் 20 ரூபாய் என்ற கணக்கில் அந்தத் தொகையை எளிதில் திரட்டி, அக்கொடிய பொருளை வாங்கலாம். ஒன்றிலிருந்து ஏழுவரையில் தனித்துவமான புகை (Puffs) அதிலிருந்து பிடிக்கமுடியும்.

The Idrice Goomany Centre in plaine- Verte –ன் ரிப்போர்ட் படி ஹேறோயினுக்கு அடிமையானவர்கள், சிகிட்சை பெற்ற 100 பேர்களில் 70 பேர்களும் செயற்கை போதை மருந்துகளை பயன்படுத்துகின்றோர்கள் ஆவார்கள். இப்போது நீங்கள் சற்று கற்பனை செய்து பாருங்கள் அதாவது பிளயினி வெர்டை (Plaine Verte) என்பது இஸ்லாமிய மக்கள் வாழும் ஒரு பகுதியாகிறது. முற்றிலும் துரதிர்ஷ்டம் என கூறலாம். அங்கு சிறியவர்களும் பெரியவர்களும் இந்த போதை மருந்துகளின் அடிமையாக மாறியிருக்கின்றனர்.

இந்த போதை மருந்தின் தாக்கம் என்பது சிறு ஆயுளை கொண்டது. இளைஞர்களுக்கு சிறு நேரம் அது மகிழ்ச்சியினை வழங்குகின்றது. என்றாலும் தொடர்ச்சியான அதன் தாகம் மிக பெரிய தீங்கினை விளைவிப்பதாகும். அந்நிலையில் இருந்து அவர்கள் தன்னுணர்வை பெற்றுக் கொள்ளும் நேரத்தில், ஏதோ ஒன்றை இழந்தோம் என அவர்களுக்கு தோன்றும். அதனால் மேலும் தாகம் கொள்கின்றனர். போதை மருந்து வியாபார கூட்டம் இந்த உண்மையினை

நன்கு உணர்ந்தவாறு இருக்கின்றனர். போதை மருந்துக்கு அடிமையானவர், இதில்லாமல் இருக்கமாட்டார். இந்த உண்மையினை நன்கு அறிந்த வியாபாரிகள் தங்களது வியாபாரத்தை மேலும் மேம்படுத்தி, அதிகமளவு போதை மருந்துகளை மேலும் உற்பத்தி செய்துவருகின்றனர். அது மூலம் இலட்சகணக்கான பணத்தை சேர்க்கின்றனர். இந்த வியாபாரம் உலகெங்கும் செழித்து வருகின்றது.

மிக கௌரவம் வாய்ந்த ஒரு ஆராய்வு இத்துறையில் அவசியமாகும். போதை மருந்துகளை பயன்படுத்தும் இளைஞர்களை இந்நிலைக்கு ஆளாக்கியதன் காரணம் மற்றும் சூழ்நிலைகளைக் குறித்து மிக ஆழமாக படித்துக்கொள்ள வேண்டும். செயற்கை போதைமருந்துகளை மட்டுமின்றி எல்லாவகையான போதை மருந்துகளைக் குறித்தும் நாம் ஆராய வேண்டும். 9 வயதான ஒரு சிறுவன் செயற்கை போதை மருந்துகள் பயன்படுத்துகின்றதாக ஒரு செய்தி வெளிவந்தது. அவனது தாய் செயற்கை போதைமருந்தான மெத்தடோன் (methadone) பயன்படுத்துகின்றவர் ஆவார். அவனது பெரிய சகோதரர் போதை மருந்து ஊசிகளை (injection) பயன்படுத்துகின்றார். இதை குறித்து நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும். 9 வயதான ஒரு சிறுவன்! நமது குழந்தைகள் அடர்ந்து வீழ்ந்துக்கொண்டிருக்கின்றனர். நேரம் நெருங்கிக் கொண்டதால் இன்றைய குத்துபா.ஃ.வை நான் நிறைவுப்படுத்துகிறேன். இன்ஷா அல்லாஹ்! மிக முக்கியமான இந்த காரியத்தைக் குறித்து அடுத்து வாரம் நான் பேசுவேன். நமது இளைய தலைமுறைகளை உலகமயமாதலின் பொறியிலிருந்தும், எல்லாவித அபாயங்களிலிருந்தும் அவர்களை பாதுகாப்பதற்கான உதவியை அல்லாஹ் நமக்கு வழங்கி கொள்வானாக.!

மிக சிறந்த முறையில் அவர்களுக்கு விழிப்புணர்வை மற்றும் கல்வியினை வழங்குவதற்கு அல்லாஹ் நமக்கு வழிவகுப்பானாக! போதை மருந்துகள் ஒரு கெட்ட கனவாக மாறிவிடட்டும். அது மிக சிரமகரமான காரியம் என்பது உண்மைதான், என்றாலும் அது நிறைவேறாத ஒன்றல்ல. என் இறைவா! எங்களுடைய சமுதாயத்தை, திரு நபி (ஸல்) அவர்களின் சமுதாயத்தை எல்லாவிதமான அபாயங்களிலிருந்தம் நீ இரட்சிப்பாயாக! சாத்தான்

அனுபவிக்கும் வேதனையிலிருந்து இந்த சமுதாய இளைஞர்களை நீ பாதுகாப்பாயாக! எனது இறைவா எங்களை பாதுகாப்பாயாக! எப்போதும் எங்களை நேர்வழியில் நடத்திக்கொள்வாயாக! எங்களுடைய சகோதரர்களுக்கு மிக சிறந்த முறையில் உதவிபுரிய நீ எங்களுக்கு வழிவகுப்பாயாக! இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Translated by:**

*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**